# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | தவக்காலம் இரண்டாம் ஞாயிறு | 16 மார்ச் 2025

எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
குடும்பம் (உடன் பயணம்) குடும்ப மதிப்பீடுகளையும் உறவையும் பேண அழைப்பு



## "கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன"

தொ.நூ:1:31

கிறிஸ்துவத்தின் அடித்தளங்களில் உள்ள அடிப்படைக் கொள்கைகளையும் அண்மைய காலங்களில் ஏற்பட்ட படிப்படியான மாற்றங்களையும் மீண்டும் ஆராய்வதன்மூலம் ஆயர்மாமன்றப் பேரவையின் வழியாக, எதிர்நோக்கின் திருப்பயணிகளாக இருப்பதற்கான பாதை தெளிவாக சாத்தியமாகும். இந்தப் பிரபஞ்சத்தையும், உலகத்தையும் படைத்த கடவுளுக்கு ஒரு எண்ணமும் நோக்கமும் இருந்தது. அதன் விளைவாக கடவுள் அனைத்தையும் "நல்லவை" என்று கண்டார் (தொ.நூல்:1) என்ற நமது அடிப்படை நம்பிக்கையுடன் தொடங்குவது மிகவும் அவசியம். படைப்பின் கதை அடுத்து ஆண் மற்றும் பெண்ணை நோக்கி நகர்கின்றது. அவையும் கடவுள் "மிகவும் நல்லது" என்று கண்டார்.

பிரபஞ்சத்தின் வெளியே உள்ள கடவுளும் மனிதனின் ஆன்மாவில் உள்ளே இருக்கும் கடவுளும் ஒருவரே என்பது தெளிவாகத் தெரிந்தது. பிரபஞ்சத்தில் இணக்கமாக வேலை செய்ய, சிறு வேறுபாடுகளுடன் பொருத்தப்பட்ட சட்டங்களும் இயக்கவியலும் நிர்ணயிக்கப்பட்டன. இருப்பினும் மனித நபர்களும் அதே இணக்கத்தை அனுபவிக்கவேண்டுமென்று கடவுள் விரும்பினார். ஆனால் ஒரு ஆபத்தான விதியுடன். "உங்கள் வாழ்க்கையின் முடிவுகளை எடுக்க நான் உங்களுக்கு சுதந்திரம் தருகிறேன்" மேலும் இதனால் ஆதாம் ஏவாளுக்கும், காயீன் ஆபேலுக்கும் என்ன நிகழ்ந்தது என்பது உங்களுக்குத் தெரியும்.

வாழ்க்கையை நுண்ணறிந்து செயல்படும் திறன் மங்கலாகிவிட்டதால், நன்மை தீமைகளை வேறுபடுத்திப் பார்க்கும் பகுத்தறிவு செயல்முறையும் முடிவுகளை எடுக்கும் திறனையும் இழந்தது. சுயநலத்தின் அடிப்படையில் மட்டுமே எடுக்கப்பட்ட முடிவுகள், ஆனால் படைப்பாளரான கடவுளின் விருப்பத்திற்கு இணங்க அவசியமில்லை. எனவே கடவுளை பிரபஞ்சத்திலிருந்தும் உலகத்திலிருந்தும் கடவுளை மனித நபர் மற்றும் மனித குடும்பத்திலிருந்தும் பிரிக்கமுடியாது என்பது உறுதியானது.

கடவுளின் விருப்பத்துடன் உள்ளார்ந்த முறையில் ஒன்றோடொன்று தொடர்புடைய நமது கிறிஸ்துவ நம்பிக்கை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விதி அல்ல; மாறாக இயேசுவின் சீடர்கள் கடவுளின் மக்களாக, நம் இதயங்களிலும் நம் வாழ்க்கையிலும் இயேசுவின் பாதையில், இயேசுவின் ஆவியானவருடன் பயணிக்க விருப்பம் கொண்டுள்ளனர். இது ஆயர்மாமன்றத்தின் சாரம் மற்றும் உருவகம். இது இல்லாமல் நடவடிக்கைகள் தீவிரவாத செயல்களாக மாறும். நம்முடைய வார்த்தைகள் சொல்லாடலாக மாறும். நம்முடைய வாழ்க்கை மேசையின் கீழ் காட்டும் விளக்குகளாக மாறிவிடும்.

ஆயர்மாமன்றத்தின் அடிப்படை என்பது திருமுழுக்குப் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்ட கடவுளின் மக்கள் எனும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பயணமாகும். திருஅவையின் ஒரு பகுதியாக மாறுவதே நம்மை கிறிஸ்துவின் உடலில் ஒரு பகுதியாக மாற்றுகிறது. தாயின் கைகளில் இருக்கும் குழந்தை கூட மென்மையுடன் அன்புசெய்யப்படவேண்டும். மேலும் திருஅவைக்காக இயேசுவின் அன்பை அனுபவிக்கவேண்டும்.

திருஅவை எவ்வாறு கடவுளின் இல்லமாகவும் குடும்பமாகவும் இருக்கிறது?✣

> குடும்பம் கடவுளின் பரிசு, அவர் தனது மீட்கும் இரக்கத்தின் ஆற்றலை வெளிப்படுத்தும் இடம் குடும்பம் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.
>
> திருத்தந்தை பிரான்சிஸ்

### இன்றைய இறைவார்த்தை:

தொடக்கநூல்: 15: 5-12, 17-18

திருப்பாடல்: 27: 1, 7-9, 13-14

பிலிப்பியர் 3: 17-4:1 (அ) 3: 20-4:1

லூக்கா 9: 28-36

INTERNAL CIRCULATION ONLY
BUL 11/2025

**Contributed by:** Archdiocesan Office for Human Development (AOHD)
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org